வீட்டை கொளுத்தியதாக அண்ணன் மீது வழக்கு

கள்ளக்குறிச்சி, ஜூன் 11: கள்ளக்குறிச்சி அருகே தம்பியின் வீட்டை கொளுத்தியதாக அண்ணன் மீது போலீஸார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

கள்ளக்குறிச்சி அருகே உள்ள எரவார் கிராமத்தைச் சேர்ந்தவர் கொளஞ்சி. இவருக்கு முத்துசாமி (38), முருகன்(34) என இரு மகன்கள் உள்ளனர். இருவருக்கும் பாகப் பிரிவினை ஏதும் நடக்காமல் வாய்மொழி வார்த்தையால் பிரித்த நிலத்தில் விவசாயம் செய்து வருவதாக தெரிகிறது.

இந்த நிலையில், திங்கள்கிழமை மாலை முருகனின் வீட்டை அவரது அண்ணன் முத்துசாமி தீயிட்டு கொளுத்தியதாகக் கூறப்படுகிறது. இதில் வீட்டில் இருந்த பொருள்கள் தீயில் கருகி சாம்பலாயின.

தொடர்ந்து, கள்ளக்குறிச்சி தீயணைப்புத் துறையினர் நிகழ்விடத்துக்கு சென்று தீயை அணைத்தனர். இதுகுறித்த புகாரின் பேரில், சின்னசேலம் போலீஸார் முத்துசாமி மீது வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

பள்ளியில் மடிக் கணினிகள் திருட்டு

விழுப்புரம், ஜூன் 11: விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி அருகே பள்ளியில் வைக்கப்பட்டிருந்த மடிக் கணினிகள் திருடுபோனது குறித்து போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

திண்டிவனம் வட்டம், வீடூரில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்தப் பள்ளியின் அலுவலக அறையில் வைக்கப்பட்டிருந்த 3 மடிக் கணினிகளை மர்ம நபர்கள் திருடிச் சென்றது திங்கள்கிழமை தெரிய வந்தது.

இதுகுறித்து பள்ளி தலைமையாசிரியர் சாந்தி அளித்த புகாரின் பேரில், விக்கிரவாண்டி போலீஸார் செவ்வாய்க்கிழமை வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

சாட்சி சொல்ல வந்தவர்களுக்கு கொலை மிரட்டல்

விழுப்புரம், ஜூன் 11: விழுப்புரம் நீதிமன்றத்தில் கொலை வழக்கு தொடர்பாக சாட்சியமளிக்க வந்தவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்த நபர்கள் மீது போலீஸார் செவ்வாய்க்கிழமை வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

விழுப்புரத்தை அடுத்த கப்பூரைச் சேர்ந்த முனியன் மகன் ராமன் (எ) ராஜன்(22). இவர் கடந்த 2023- ஆம் ஆண்டு காணை அருகே வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கு விழுப்புரம் எஸ்சி, எஸ்டி வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

செவ்வாய்க்கிழமை இந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணக்கு வந்தது. அப்போது முனியன், மனைவி கஸ்தூரி, மகள் ரேவதி ஆகியோர் ஆஜராகி சாட்சியம் அளித்துவிட்டு வெளியே வந்தனர்.

அப்போது, அங்கு வந்த வழக்கில் தொடர்புடைய விழுப்புரத்தைச் சேர்ந்த கார்த்திக் உள்ளிட்டோர் முனியன் மற்றும் அவரது குடும்பத்தை தாக்கி கொலை மிரட்டல் விடுத்தனராம். இதுகுறித்த புகாரின் பேரில், விழுப்புரம் தாலுகா காவல் நிலையப் போலீஸார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பேருந்து மோதி காயமடைந்தவர் உயிரிழப்பு

கள்ளக்குறிச்சி, ஜூன் 11: கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அருகே அரசுப் பேருந்து மோதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் திங்கள்கிழமை இரவு உயிரிழந்தார்.

சின்னசேலம் வட்டம், பூண்டி அம்மையகரம் கிராமத்தைச் சேர்ந்தவர் ராமசாமி (55). இவர் கடந்த 4-ஆம் தேதி பூண்டி விநாயகபுரத்தில் தேசிய நெடுஞ்சாலையைக் கடக்க முயன்றாராம்.

அப்போது, கள்ளக்குறிச்சியில் இருந்து சேலம் நோக்கிச் சென்ற அரசுப் பேருந்து ராமசாமி மீது மோதியதில் பலத்த காயமடைந்த அவர், கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர், தீவிர சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், அங்கு திங்கள்கிழமை இரவு உயிரிழந்தார்.

இதுகுறித்த புகாரின் பேரில், சின்னசேலம் போலீஸார் வழக்குப் பதிந்து பேருந்து ஓட்டுநரிடம் விசாரணை நடத்தினர்.

100 நாள் வேலைத் திட்டத்தில் பணி வழங்க மாற்றுத் திறனாளிகள் கோரிக்கை

விழுப்புரம், ஜூன் 11: நூறு நாள் வேலை உறுதித் திட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கும் பணி வாய்ப்பு வழங்க வேண்டும் என மாற்றுத்திறனாளிகள் சங்கத்தினர் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை கோரிக்கை மனு அளித்தனர்.

நூறு நாள் வேலைத் திட்டத்தில் பணி வாய்ப்பு வழங்க வேண்டும் என தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள், பாதுகாப்போர் உரிமைக்கான நலச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதை வலியுறுத்தி விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. மனுவை வட்டார வளர்ச்சி அலுவலர் குலோத்துங்கன் பெற்றுக்கொண்டு நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார். மாற்றுத்திறனாளிகள் பாதுகாப்போர் நலச் சங்க மாவட்டச் செயலர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை கோரிக்கை மனு அளிக்க வந்த மாற்றுத்திறனாளிகள் சங்கத்தினர்.

சவுக்கு தோப்பில் தீ விபத்து

விழுப்புரம், ஜூன் 11: விழுப்புரம் மாவட்டம், மயிலம் அருகே சவுக்கு தோப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் ஆயிரக்கணக்கான மரங்கள் தீயில் கருகி நாசமாயின.

விழுப்புரம் வாலாஜா பள்ளி வாசல் தெருவைச் சேர்ந்தவர் அப்துல் ரஜாக் மகன் ரஜாக் (27). இவருக்குச் சொந்தமான விவசாய நிலங்கள் மயிலம் அருகே உள்ள அரியாங்குப்பத்தில் உள்ளன. இதில் சுமார் 15 ஏக்கர் பரப்பில் சவுக்கு பயிரிட்டிருந்தது.

இந்த நிலையில், திங்கள்கிழமை சவுக்குத் தோப்பு தீப்பற்றி எரிந்தது. இதில் ஆயிரக்கணக்கான மரங்கள் தீயில் கருகி சேதமடைந்தன. மின்கசிவால் தீ விபத்து நிகழ்ந்திருக்கலாம் எனக் கூறப்படும் நிலையில், இதுகுறித்த புகாரின்பேரில், மயிலம் போலீஸார் செவ்வாய்க்கிழமை வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குடிநீர் வழங்கக் கோரி பொதுமக்கள் சாலை மறியல்

நெய்வேலி, ஜூன் 11: கடலூர் மாவட்டம், கருவேப்பிலங்குறிச்சி அருகே குடிநீர் வழங்கக் கோரி காலிக் குடங்களுடன் பொதுமக்கள் செவ்வாய்க்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

விருத்தாசலம் வட்டம், கருவேப்பிலங்குறிச்சி காவல் சரகம், ராஜேந்திரப்பட்டினம் ஊராட்சிக்குள்பட்ட சின்னாத்துக்குறிச்சி கிராமத்தில் 100-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

இவர்களுக்கு, ஊராட்சி நிர்வாகம் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்து வந்தது.

இந்த நிலையில், கடந்த இரண்டு நாள்களுக்கு முன்பு மின் மோட்டார் பழுதடைந்ததால் குடிநீர் விநியோகம் தடைபட்டதாம்.

கருவேப்பிலங்குறிச்சியில் குடிநீர் வழங்கக்கோரி செவ்வாய்க்கிழமை காலிக்குடங்களுடன் சாலை மறியலில் ஈடுபட்ட பொதுமக்கள்.

இதனால், உடனடியாக மின் மோட்டாரை பழுது நீக்கி குடிநீர் வழங்க வேண்டும் என ஊராட்சி நிர்வாகத்திடம் கிராம மக்கள் முறையிட்டனர். ஆனால், ஊராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லையாம்.

இதனால், பாதிக்கப்பட்ட கிராம மக்கள் காலிக் குடங்களுடன் விருத்தாசலம்-ஸ்ரீமுஷ்ணம் சாலையில் சின்னாத்துக்குறிச்சி பேருந்து நிறுத்தம் அருகே செவ்வாய்க்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

தகவலறிந்து வந்த கருவேப்பிலங்குறிச்சி காவல் உதவி ஆய்வாளர் ராமலிங்கம் பொதுமக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினார்.

மேலும், ஊராட்சி மன்றத் தலைவர் சுரேஷ், அதிகாரிகளிடம் பேசி குடிநீர் பிரச்சனையை தீர்ப்பதாக தெரிவித்தார்.

இதையடுத்து, பொதுமக்கள் சாலை மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர். இந்த திடீர் மறியலால் சுமார் அரை மணி நேரம் போக்குவரத்து தடைபட்டது.

கொலை மிரட்டல்: இளைஞர் கைது

கள்ளக்குறிச்சி, ஜூன் 11: கள்ளக்குறிச்சி அருகே ஒலி பெருக்கி உரிமையாளருக்கு கொலை மிரட்டல் விடுத்த இளைஞரை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், நூரோலை கிராமத்தைச் சேர்ந்தவர் குருசாமி(55). ஒலி பெருக்கி மற்றும் டியூப் லைட்கள் கட்டும் பணி செய்து வருகிறார்.

இவர், முத்துமாரியம்மன் கோயில் திருவிழாவுக்காக இதே கிராமத்தில் ஒளி அலங்காரம் மற்றும் டியூப்லைட் கட்டியுள்ளார்.

அப்போது அதே கிராமத்தைச் சேர்ந்த வரதராஜன் மகன் ரகோத் (30). ஒளி அலங்காரம் சரியாக செய்யவில்லை எனக் கூறி டியூப் லைட்டை உடைத்து, குருசாமிக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்த புகாரின் பேரில், ரிஷிவந்தியம் போலீஸார் வழக்குப் பதிந்து ரகோத்தை செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

இருவேறு இடங்களில் விபத்து: மூதாட்டி உள்பட இருவர் உயிரிழப்பு

விழுப்புரம், ஜூன் 11: விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் அருகே இருவேறு இடங்களில் ஏற்பட்ட விபத்தில் இளைஞர், மூதாட்டி உயிரிழந்தனர்.

திருவெண்ணெய்நல்லூர் வட்டம், காரப்பட்டு, மாரியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் பாலசுப்பிரமணியன் மகன் தீனதயாளன் (37).

அரசூரில் உள்ள கல்லூரியில் காவலாளியாக வேலை பார்த்து வந்தார்.

இவர் செவ்வாய்க்கிழமை உளுந்தூர்பேட்டை- விழுப்புரம் சாலையில் சைக்கிளில் சென்றபோது, லாரி மோதியதில் தீனதயாளன் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார். நிகழ்விடத்துக்கு சென்ற போலீஸார் சடலத்தைக் கைப்பற்றி விழுப்புரம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு உடல்கூறாய்வுக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், விபத்து குறித்து திருவெண்ணெய்நல்லூர் போலீஸார் செவ்வாய்க்கிழமை வழக்குப் பதிந்து விசாரணைநடத்தி வருகின்றனர்.

திருவெண்ணெய்நல்லூர் வட்டம், சித்தலிங்கமடம், பிரதானச் சாலையைச் சேர்ந்த கிருஷ்ணன் மனைவி விஜயா (70). இவர் ஞாயிற்றுக்கிழமை திருக்கோவிலூர்- திருவெண்ணெய்நல்லூர் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தாராம். அப்போது, பைக் இவர் மீது மோதியதில் பலத்த காயமடைந்தார்.

திருக்கோவிலூரில்உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த விஜயா திங்கள்கிழமை உயிரிழந்தார்.

இதுகுறித்த புகாரின் பேரில், திருவெண்ணெய்நல்லூர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

7 பவுன் நகைகள் திருட்டு

வந்தவாசி, ஜூன் 11: வந்தவாசி அருகே வீட்டின் பூட்டை உடைத்து 7 பவுன் தங்க நகைகளை மர்ம நபர்கள் திருடிச் சென்றனர்.

வந்தவாசியை அடுத்த வெளியம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் எட்டியப்பன். இவரது மனைவி ஆதிலட்சுமி(58). எட்டியப்பன் ஆந்திர மாநிலத்தில் வேலை செய்து வருகிறார்.

கடந்த 2-ஆம் தேதி இரவு ஆதிலட்சுமி வீட்டை பூட்டிவிட்டு அருகிலுள்ள உறவினர் வீட்டில் சென்று தங்கினார்.

பின்னர் மறுநாள் காலை வீட்டுக்கு வந்து பார்த்தபோது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதும், பீரோவிலிருந்த 7 பவுன் தங்க நகைகள், ரூ.20 ஆயிரம் ரொக்கம், வெள்ளிப் பொருள்கள் திருடப்பட்டிருப்பதும் தெரிய வந்தது.

इंडियन बैंक Indian Bank
इलाहाबाद ALLAHABAD

MEGA E-AUCTION SALE

மண்டல அலுவலகம், கடலூர்
3 வது தளம், AVR டவர், 4, பாரதி சாலை, கடலூர், தொலைபேசி - 04142 233832 / 04142 231444 மின்னஞ்சல் zocuddalore@indianbank.co.in

இணைப்பு- IV-A (பார்க்க விதி 8(6))

அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைசொத்து பாதுகாப்பு மற்றும் நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002- ன் விதி 8(6) க்கான விதி விலக்கு - ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பு மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, என்ற ஜாமீன் பெற்று கடனளித்த இந்தியன் வங்கியின் அந்தந்த கிளைகளில் கணக்குகளுக்கான அதிகாரப்பூர்வ அலுவலர்களால் பின்வரும் கடன்தாரர் / ஜாமீன்தாரரிடமிருந்து சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையாச்சொத்துக்கள் ஜாமீன் பெற்று கடனளித்தவரால், **"இருக்கின்ற இடத்தில்"**, **"இருக்கின்ற நிலையில்"** மற்றும் **"இருக்கின்றவற்றுடன்"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

மின்னணு ஏல தேதி & நேரம் : 26.06.2024
காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (இதன் கீழ்க்கண்ட அனைத்து வரிசை எண்களுக்கும்)

Nodal Bank Account No. and A/c. Name: 6169974808 - E-AUCTION EMD ACCOUNT
கிளை பெயர் மற்றும் IFS குறியீட்டெண் : INDIAN BANK, CUDDALORE MAIN IFSC : IDIB000C034

சொத்துக்கள் மற்றும் தொடர்பான ஆவணங்கள் ஆய்வுக்கான தேதி மற்றும் நேரம் : 10.06.2024 முதல் 15.06.2024 காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை

விலைப்புள்ளி படிவம் மற்றும் KYC ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கான தேதி மற்றும் நேரம் : 11.06.2024 முதல் 26.06.2024 காலை 10.00 மணி முதல் மாலை 07.00 மணி வரை

டேவணித்தொகையை Global EMD Wallet ல் பரிமாற்ற கடைசி தேதி - 25.06.2024

இந்தியன் வங்கி, வடக்கு மேலூர் - இந்திரா நகர் கிளை

1 கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் மற்றும் முகவரி - 1).திரு.S.ராஜாமணி (கடன்தாரர்) த/பெ A. சக்திவேல், முகவரி: எண் 19, இந்திரா நகர், குறிஞ்சிப்பாடி வட்டம், கடலூர்- 607302 2. திரு.A. சக்திவேல் (கூட்டுக்- கடன்தாரர் & அடமானதாரர்) த/பெ ஆறுமுகம், முகவரி: எண் 19-1, இந்திரா நகர், குறிஞ்சிப்பாடி வட்டம், கடலூர்- 607302

04.06.2024 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை – ரூ. 16,88,813/- (ரூபாய் பதினாறு லட்சத்து எண்பத்து எட்டாயிரத்து எண்ணூற்று பதின்மூன்று மட்டும்) 05.06.2024 முதல் மேற்கொண்டு வரும் வட்டி, செலவுகள், இதர கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியன.

சொத்தின் விரிவான விபரம் :- நிலம் மற்றும் கட்டடத்தை உள்ளடக்கிய அனைத்து இன்றியமையா பகுதிகளும் பாகங்களும் கொண்ட அசையாச் சொத்து அமைவிடம் கடலூர் பதிவு மாவட்டம், குறிஞ்சிப்பாடி சார்பதிவகம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றிய வரம்புக்குட்பட்டது, எல்லப்பன்பேட்டை கிராமம், புதிய சர்வே எண் 375/7A, உட்பிரிவு நத்தம் மறு சர்வே எண் 375/7A3, தொடர்புடைய பழைய சர்வே எண் 735/5- ஏக்கர் 0.29 செண்ட் இதில் அளவீடுகள்: கிழமேல் இருபுறங்களும் 26 அடி, தென்வடல் இருபுறங்களும் 50 அடி, பரப்பளவு: 1300 சதுர அடி. **எல்லைகள்-** திருசங்கு மனைக்கு மேற்கு, சுப்ரமணியம் மனைக்கு கிழக்கு, பெரியசாமி மனைக்கு தெற்கு, பொது நடைபாதைக்கு வடக்கு

அடிப்படை விலை ரூ.25.19 லட்சம்	சுவாதீன வகை - அடையாள சுவாதீனம்	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை - ரூ.10,000/-	சொத்து அடையாள எண். IDIB6722606133	டேவணித்தொகை ரூ.2.51 லட்சம்

2 கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் மற்றும் முகவரி - 1).திருமதி.TG. உமா மகேஸ்வரி (கடன்தாரர்) க/பெ TG கோபாலகிருஷ்ணன் 2.திரு. TG கோபாலகிருஷ்ணன் (ஜாமீன்தாரர்) த/பெ கோவிந்தசாமி. இருவரது முகவரி: எண் 64/C, பிளாக் A, VIP நகர் அருகில், மருங்கூர், பண்ருட்டி வட்டம், கடலூர்

04.06.2024 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை – ரூ.14,11,553/- (ரூபாய் பதிநான்கு லட்சத்து பதினொன்றாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) 05.06.2024 முதல் மேற்கொண்டு வரும் வட்டி, செலவுகள், இதர கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியன.

சொத்தின் விரிவான விபரம் :- நிலம் மற்றும் கட்டடத்தை உள்ளடக்கிய அனைத்து இன்றியமையா பகுதிகளும் பாகங்களும் கொண்ட அசையாச் சொத்து அமைவிடம் கடலூர் பதிவு மாவட்டம், காடாம்புலியூர் சார்பதிவு மாவட்டம், மருங்கூர் கிராமம், 0.76.0 ஏர்-இன் அங்கமான புதிய RS 410/2, பழைய RS எண் 700/2 ஏக்கர் 2.59 செண்ட் மற்றும் RS 700/3 ஏக்கர் 1.17 மொத்தம் 3.76 ஏக்கரின் அங்கமான ஏக்கர் 1.00 ஏக்கர் 0.29 செண்ட் (0.12.0 ஏர்) இதனுடன் அங்குள்ள 5 முந்திரி மரங்கள். (தற்போது அமைப்பெற்றுள்ள RS 410/2A3- 0.09.5 ஏர்) இதனுடன் அங்குள்ள வீடு **எல்லைகள்.** கோபாலகிருஷ்ணனின் நிலத்துக்கு தெற்கு, பூபதியின் நிலத்துக்கு மேற்கு, NLC வளாகத்துக்கு வடக்கு, கோபி சடகோபன் நிலத்துக்கு கிழக்கு

அடிப்படை விலை ரூ.63.79 லட்சம்	சுவாதீன வகை - அடையாள சுவாதீனம்	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை - ரூ.10,000/-	சொத்து அடையாள எண். IDIB822005460	டேவணித்தொகை ரூ.6.37 லட்சம்

ஏலதாரர்கள், ஆன்லைன் விலைகோரலில் பங்கேற்க, எமது மின்னணு ஏல சேவைதாரர் MSTC Ltd - ன் வலைதளம் (www.mstcecommerce.com) யை பார்வையிட அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில்நுட்ப ரீதியான உதவிக்கு MSTC ன் உதவி மைய எண். 033-2290 1004 யை அழைக்கவும் மற்றும் இதர உதவி எண்களும் சேவைதாரரின் உதவி மையத்தில் கிடைக்கப்பெறலாம். பதிவு நிலையை MSTC Ltd - யிடமிருந்து அறிந்து கொள்ள ibapiop@mstcecommerce.com யை தொடர்பு கொள்ளவும் மற்றும் டேவணித்தொகை நிலையை அறிந்து கொள்ள **ibapifin@mstcecommerce.com** யை தயவு கூர்ந்து தொடர்பு கொள்ளவும்.

சொத்து விபரங்களுக்கும், சொத்தின் புகைப்படத்துக்கும் வலைதளம் https://ibapi.in யை தயவு கூர்ந்து பார்வையிடவும்., மேலும் இந்த தளம் தொடர்பான விசாரணைக்கு தயவு கூர்ந்து உதவி எண்கள். '18001025026' மற்றும் '011-41106131' ல் தொடர்பு கொள்ளவும்.

ஏலதாரர்கள் சொத்தை வலைதளம் https://ibapi.in மற்றும் www.mstcecommerce.com ல் தேடும் போது இதன் மேற்குறிப்பிட்டுள்ள சொத்து அடையாள எண்ணை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தேதி : 11.06.2024
இடம் : கடலூர்

அதிகாரப்பூர்வ அலுவலர்
இந்தியன் வங்கி

கடன் வசூல் தீர்ப்பாயம்-III
6ஆவது தளம், கூடுதல் அலுவலகக் கட்டடம், சாஸ்திரி பவன்,
ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 006.

TRC எண்: 2715/2023 **நாள்: 05.06.2024**

E-ஏல விற்பனை

M/d. வெஸ்ட்டர்ன் எக்ஸ்பிரஸ் பிரைவேட் லிட். மற்றும் 4 பிறர் ஆர்சில் லிட்., மும்பை கிளைக்கு OA எண்: 42/2007-இன்படி செலுத்த வேண்டிய **02.06.2024 நாள்படியான** ரூ.25,83,10,598/- (ரூபாய் இருபத்தைந்து கோடியே எண்பத்து மூன்று இலட்சத்து பத்தாயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று எட்டு மட்டும்) தொகையைத் திரும்பப் பெறுவதற்காகக் கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்து இணையவழி E-ஏலத்தின் மூலம் **http://www.arcil.co.in** இணையத்தளத்தின் வழியே விற்பனை செய்யப்பட உள்ளது.

சொத்து விவரம்

இனம் எண் 1: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய புஞ்சை நிலம். பரப்பளவு 1.32-1/2 ஏக்கர், 2.65 ஏக்கரில் அடங்கியது. அமைவிடம் - சர்வே எண் 297/149, தேத்துரை கிராமம், (புதிய சர்வே எண் 197/1), செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: தெற்கு: ஜெயா மற்றும் ஜெயப்பட்டு ஆகியோரின் நிலம், வடக்கு: கண்ணன் அவர்களின் நிலம், மேற்கு: அய்யாதுரை அவர்களின் நிலம், கிழக்கு: வாய்க்கால் புறம்போக்கு நிலம். இது வந்தவாசி சார்பதிவு மாவட்டம் மற்றும் செய்யாறு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

இனம் எண் 2: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய புஞ்சை நிலம். பரப்பளவு 1.19 ஏக்கர், சர்வே எண் 298/149, தேத்துரை கிராமம், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: தெற்கு: சர்வே எண் 299, வடக்கு: பெருமாள் பிள்ளை நிலம், மேற்கு: அரசு தோப்பு, கிழக்கு: அரசு வாய்க்கால் புறம்போக்கு நிலம். இது வந்தவாசி சார்பதிவு மாவட்டம் மற்றும் செய்யாறு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

இனம் எண் 3: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய புஞ்சை நிலம். பரப்பளவு 33 சென்ட், சர்வே எண் 298/149, தேத்துரை கிராமம், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: சண்முக தோப்பு நிலம், தெற்கு: அண்ணாமலை நிலம், கிழக்கு: பெருமாள் பிள்ளை நிலம், மேற்கு: முனுசாமி பிள்ளை நிலம். இது வந்தவாசி சார்பதிவு மாவட்டம் மற்றும் செய்யாறு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

இனம் எண் 4: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய புஞ்சை நிலம். பரப்பளவு 25 சென்ட், சர்வே எண் 299/149, தேத்துரை கிராமம், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: சர்வே எண் 298, தெற்கு: பெருமாள் பிள்ளை நிலம், கிழக்கு: அரசு வாய்க்கால் புறம்போக்கு நிலம், மேற்கு: அரசு தோப்பு நிலம். இது வந்தவாசி சார்பதிவு மாவட்டம் மற்றும் செய்யாறு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

இனம் எண் 5: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய புஞ்சை நிலம். பரப்பளவு 33 சென்ட், சர்வே எண் 298/149, தேத்துரை கிராமம், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: சண்முக முதலியார் நிலம், தெற்கு: அண்ணாமலை முதலியார் நிலம், கிழக்கு: முனியம்மாள் நிலம், மேற்கு: அரசு இலுப்பை தோப்பு நிலம். இது வந்தவாசி சார்பதிவு மாவட்டம் மற்றும் செய்யாறு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

இனம் எண் 6: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய புஞ்சை நிலம். பரப்பளவு 1.44 ஏக்கர், சர்வே எண் 299, தேத்துரை கிராமம், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: பெருமாள் பிள்ளை நிலம், தெற்கு: முனியம்மாள் மற்றும் பூங்காவனம் பிள்ளை ஆகியோரின் நிலம், கிழக்கு: அரசு வாய்க்கால் புறம்போக்கு நிலம், மேற்கு: அரசு இலுப்பை தோப்பு நிலம். இது வந்தவாசி சார்பதிவு மாவட்டம் மற்றும் செய்யாறு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

இனம் எண் 7: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய புஞ்சை நிலம். பரப்பளவு 0.49 சென்ட், சர்வே எண் 298, தேத்துரை கிராமம், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: வேல்முத்தம் தோப்பு, தெற்கு: அண்ணாமலை முதலியார் நிலம், கிழக்கு: அரசு வாய்க்கால் புறம்போக்கு நிலம், மேற்கு: அண்ணாமலை முதலியார் நிலம். இது வந்தவாசி சார்பதிவு மாவட்டம் மற்றும் செய்யாறு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

இனம் எண் 8: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய புஞ்சை நிலம். பரப்பளவு 1.27 ஏக்கர், சர்வே எண் 299, தேத்துரை கிராமம், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: அண்ணாமலை முதலியார் நிலம், தெற்கு: அண்ணாமலை முதலியார் நிலம், கிழக்கு: அரசு வாய்க்கால் புறம்போக்கு நிலம், மேற்கு: அரசு தோப்பு புறம்போக்கு நிலம். இது வந்தவாசி சார்பதிவு மாவட்டம் மற்றும் செய்யாறு பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

குறைந்தபட்ச விலை : **ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்)**
E-ஏல நாள் மற்றும் நேரம் : 19.07.2024 அன்று முற்பகல் 11.00 மணிக்கும் நண்பகல் 12.00 மணிக்கும் இடையில் - விற்பனை முடிவடையும் வரை தலா 3 நிமிடங்கள் தானாகக் கால நீட்டிப்பாகும் வகையில்.
டேவணித்தொகை (EMD) : குறைந்தபட்ச விலையில் 10%
டேவணித்தொகையுடன் செலுத்தக் கடைசி நாள் : 16.07.2024 அன்று அல்லது அதற்கு முன் FT/NEFT/RTGS மூலம் **"The Recovery Officer, DRT-3, Chennai"** எனும் பெயருக்குச் செலுத்த வேண்டிய நடப்புக் **கணக்கு எண் 16330200000200, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கதீட்ரல் கிளை, சென்னை-2.**
IFSC எண் : **IOBA0000109**.
ஏல உயர்வுத் தொகை : **குறைந்தபட்சம் ரூ.50,000/- அல்லது ரூ.50,000/- மடங்குகளில்**
சொத்து ஆய்வு : **01.07.2024 அன்று முற்பகல் 11:00 மணி முதல் பிற்பகல் 3:00 மணி வரை.**

எந்தச் சூழ்நிலையிலும் தாள் வடிவிலான ஏலப்புள்ளிகள் தீர்ப்பாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விசாரணைகள் ஊக்குவிக்கப்பட மாட்டா.

ஏலம் தொடர்பான இதர விவரங்கள் மற்றும் e-ஏலப் படிவம், அறிவிக்கை, விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய அணுக வேண்டிய இணையத்தளம்: https://www.arcil.co.in.

சொத்து பற்றி மேலும் விவரங்கள் தேவைப்பட்டால் பெற: திரு. ரகோத்தமன், மூத்த முதன்மை மேலாளர், M/s.அசெட் ரீகன்ஸ்டிரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்., ஆர்சில் ஆர்ம்ஸ் அலுவலகம், 1-G, 1ஆவது தளம், செஞ்சுரி வளாகம், எண் 560-562, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018. (கைப்பேசி-9962042022). மேலும் e-ஏலநடைமுறை தொடர்பாகவோ ஏலப்புள்ளிப்படிவத்தையோ தேவையான இதர ஆவணங்களையோ தரவேற்றுவது தொடர்பாகவோ உதவி தேவைப்பட்டால் தொடர்பு கொள்க: **திரு. S. குருநாதன், மூத்த முதன்மை மேலாளர் (91765 00311).**

SEAL

ஒம்/-
(P. பிரேம்குமார்)
வசூல் அலுவலர்
05.06.2024

தனியார் பேருந்து மோதி இளைஞர் உயிரிழப்பு

கள்ளக்குறிச்சி, ஜூன் 11: கள்ளக்குறிச்சி அருகே சாலையைக் கடக்க முயன்ற இளைஞர் மீது பேருந்து மோதியதில் திங்கள்கிழமை உயிரிழந்தார்.

கள்ளக்குறிச்சி அருகே உள்ள ஏமப்பேர் குளத்துமேட்டு சாலைப் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீதர் மகன் சிவா (30). இவர் திங்கள்கிழமை மாலை தனது பைக்கில் கள்ளக்குறிச்சி-சின்னசேலம் தேசிய நெடுஞ்சாலையில் சென்றாராம். உலகங்காத்தான் கைகாட்டி அருகே அவர் சாலையை கடந்த போது, கள்ளக்குறிச்சியில் இருந்து சின்னசேலம் நோக்கிச் சென்ற தனியார் பேருந்து மோதி சிவா நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார். இதுகுறித்த புகாரின் பேரில், கள்ளக்குறிச்சி போலீஸார் வழக்குப் பதிந்து தனியார் பேருந்து ஓட்டுநரிடம் விசாரணை நடத்தினர்.

இருவேறு இடங்களில் பெண் உள்பட இருவர் மர்ம மரணம்

விழுப்புரம், ஜூன் 11: விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் அருகே இருவேறு பகுதிகளில் பெண் உள்பட இருவர் மர்மமான முறையில் உயிரிழந்தனர்.

சென்னை போரூரை அடுத்த மௌலிவாக்கம் தனலட்சுமி நகரைச் சேர்ந்த கார்த்திகேயன் மனைவி உஷா (21). இவர்களுக்கு திருமணமாகி ஒன்றரை ஆண்டுகள் ஆகின்றன. உஷா உடல் நலக்குறைவு காரணமாக மரக்காணம் வட்டம், வன்னிப்பேரில் உள்ள தனது பெற்றோர் வீட்டில் தங்கியிருந்தாராம்.

அவருக்கு ஞாயிற்றுக்கிழமை மீண்டும் உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனராம். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் உஷா ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தார். இதுகுறித்து பிரம்மதேசம் போலீஸார் திங்கள்கிழமை வழக்குப் பதிந்தனர். வருவாய்க் கோட்டாட்சியர் விசாரணை நடத்தி வருகிறார்.

விவசாயி உயிரிழப்பு: வானூர் வட்டம், கடகம்பட்டு மாரியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் கமலக்கண்ணன் மகன் அரிதாஸ் (53), விவசாயி . இவர் ஞாயிற்றுக்கிழமை அதே பகுதியில் உள்ள விவசாய நிலத்துக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பவில்லையாம். உறவினர்கள் அங்கு சென்று பார்த்தபோது, அரிதாஸ் மோட்டார் கொட்டகை அருகே மயங்கிக் கிடந்தார்.

புதுச்சேரி தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்று பரிசோதித்ததில், அரிதாஸ் ஏற்கெனவே உயிரிழந்தது தெரிய வந்தது. இதுகுறித்த புகாரின்பேரில், வானூர் போலீஸார் திங்கள்கிழமை வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

நாளைய மின் தடை

விழுப்புரம் நகரம்

நேரம்: காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை.
பகுதிகள்: விழுப்புரம் பாண்டியன்நகர், பார்த்தசாரதி நகர், மஞ்சுநகர், ஆடல்நகர், கட்டபொம்மன் நகர், எத்திராஜ் நகர், காந்தி நகர், வசந்தம் நகர்.

சாலாமேடு

நேரம்: முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை.
பகுதிகள்: இ.பி. காலனி, ஜீவராஜ் நகர், என்.ஜி.ஜி.ஓ. காலனி, காவலர் குடியிருப்புப் பகுதி, துரையரசன் நகர், மீனாட்சி நகர், பாரதியார் நகர், சாலாமேடு.